**தலைப்பு 307 – மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தொடர்பான 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தலைப்பு 307 – மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக்கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக்கணக்கு**

---

**மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

---

அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 3,350.97 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 3,295.67 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் ரூபா 55.30 மில்லியன் அல்லது 1.65 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டுவருபவை | 2,211.47 | 2,180.46 | 31.01 | 1.40 |
| மூலதனம் | 1,139.50 | 1,115.21 | 24.29 | 2.13 |
| மொத்தம் | 3,350.97 | 3,295.67 | 55.30 | 1.65 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள்

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான 04 வருமானக் குறியீடுகளுக்கான ரூபா 10,795.00 மில்லியன் கூட்டு மொத்தமான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 11,005.03 மில்லியன் கூட்டு மொத்த வருமானங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 101.95 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை/(பற்றாக்குறை) |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20-03-02-14 | 8,500.00 | 8,847.54 | 347.54 | 4.09 |
| 10-03-07-04 | 65.00 | 64.54 | (0.46) | (0.71) |
| 10-03-01-00 | 1,330,00 | 1,400.41 | 70.41 | 5.29 |
| 20-03-02-15 | 900.00 | 692.54 | (207.46) | (23.05) |
| மொத்தம் | 10,795.00 | 11,005.03 | 210.03 | 1.95 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்கான 30701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 30.00 | 28.35 | 20.00 | 21.36 | 140.00 | 106.37 |

## 2.4 பொதுவைப்புக் கணக்கு

திணைக்களத்திற்கு கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 300.33 மில்லியன் ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0053/000 | 1.46 |
| 6000/0000/00/0013/0027/000 | 2.52 |
| 6000/0000/00/0014/0004/000 | 216.96 |
| 6000/0000/00/0016/0010/000 | 36.58 |
| 6000/0000/00/0018/0012/000 | 42.81 |
| மொத்தம் | 300.33 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் வாக்கு பேரேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

இரண்டு செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 01 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

#### 3.2.2 அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை.

2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட 1202 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து 15 சதவீதமும் 1401 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து 10 சதவீத நிதி ஏற்பாடும் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியளவில் இந்நிதி ஏற்பாட்டில் முறையே 2.6 சதவீதம் மற்றும் 2.8 சதவீத நிதி ஏற்பாடு மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 448,557 தொகையான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவர் வருமான கணக்கீடு உத்தியோகத்தராக 04 வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன அவ்வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 20-03-02-15 ஆம் இலக்க வருமானக் குறியீடு- மோட்டார் வகனங்களை ஒப்படைக்கும் போது வாகன இறக்குமதி உத்தரவுப் பத்திரங்களின் கீழ் அறவிடப்படும் கட்டணம்

2015 ஆம் ஆண்டின் போது வருமானக் குறியீடு முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 மார்ச் 25 ஆந் திகதிய 01/(02) 2013 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இவ்வருமானக் குறியீட்டின் கீழ் வருமானங்களைச் சேகரித்து வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ்வருமானக் குறியீட்டின் கீழ் வருமானங்களைச் சேகரிப்பதற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10-03-01-00 ஆம் இலக்க வருமானக் குறியீடு – அதிசொகுசு மோட்டார் வாகன வரி வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிசொகுசு மோட்டார் வாகன வரிகளை அறவிடுவதற்காக 1995 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட வரையறைகள் மீளாய்வாண்டு வரை திருத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அதிசொகுசு வாகனங்களை இனங்காண்பதற்கான அடிப்படை வரையறைகளாக வாகனத்தின் என்ஜின் இயலளவும் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள் வகையும் மாத்திரம்

கவனத்திற்கு எடுத்துக்கொண்டதன் காரணமாக அதிசொகுசு வாகன வரி அறவிடவேண்டிய சில வாகனங்கள் அரைச் சொகுசு வரி அறவிடும் வாகனங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உதாரணமாக டொயோடா ப்ராடோ வாகனம், மொன்டெரோ ஜீப் .

(ii) நிதிப் பிரமாணம் 128 (2) (இ) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் அவ் வருமானக் குறியீடு தொடர்பாக 2016 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு மற்றும் இரண்டாம் அரையாண்டுகளுக்கான நிலுவை வருமான அறிக்கையும் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வருமான அறிக்கையும் குறித்த திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிபிகப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 128 (2) (உ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்களை தாமதமின்றி சேகரித்து கொள்வது தொடர்பாக ஒழுங்குமுறைகள் ஈடுபடுத்தப்பட்ட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை மிளாய்வாண்டிற்கான நிலுவை வருமானங்களின் பெறுமதியைக் கணிப்பிட்டு அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக கிடைக்கவேண்டிய நிலுவையாக உள்ள சொகுசு வாகன வரி வருமானம் ரூபா 531 மில்லியனாக அறிவிக்கப்பட்டிருந்தும் நிலுவை வரி வருமானப் பெறுவனவுகளாக ரூபா 165 மில்லியன் மாத்திரம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) 10-03-07-04 ஆம் இலக்க வருமானக் குறியீடு – மோட்டர் வாகன விற்பனை மீதான வரி வருமானம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாகனங்களின் தொடக்கப்பதிவு உரிமையாளர்களால் அவ்வாகனங்களின் உரிமையாண்மையை மாற்றுவது தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு தெரியப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் விற்பனை அடிப்படையிலான வரி வருமானத்தை அறவீடு செய்ய முடியும் என்ற போதிலும் இவ்வாறு தெரியப்படுத்தாது திறந்த கைமாற்றல் பத்திரத்தின் கீழ் உரிமையை கைமாற்றும் சந்தர்ப்பங்களின் போது அறவிடப்படவேண்டிய வரிப் பணத்தை இனங்காண்பதற்கான முறையான வேலைத்திட்டம் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மோட்டார் கார்கள் தொடக்கத்தில் பதிவு செய்ததிலிருந்து 07 ஆண்டுகள் மிகைப்பதற்கு முன்னர் திறந்த கைமாற்றல் பத்திரத்தின் கீழ் அவற்றின் உரிமையாண்மையை மாற்றம் செய்யும் போது இரண்டாவது உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வரிப்பணத்தை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மோட்டார்கார்களை விற்பனை செய்யதல் மீதான வரியாக ஒரு வாகனத்திற்கு ரூபா 3,000 தொகை 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்டிருந்ததாக வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அந்த உத்தரவுப்பத்திர கட்டணத்தை அறவிடுவது தொடர்பான ஒழுங்கு விதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் உரிய வருமானக் குறியீட்டின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடபட்டிருக்கவில்லை.

(ஈ) 20-03-02-14 ஆம் இலக்க வருமானக் குறியீடு – மோட்டார் வாகன போக்கவரத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்களும் ஏனைய பெறுவனவுகளும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ்வருமாக் குறியீட்டின் கீழ் தொடக்கத்தில் 06 வருமான மூலங்கள் இனங்காணப்பட்டிருந்தும் அந்த ஒவ்வெரு வருமான மூலத்திலிருந்து சேகரிக்கப்படுகின்ற வருமானம் எவ்வளவு என்பதனை உறுதியாக இனங்காணக்கூடிய வகையில் ஒரு முறைமை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒவ்வெரு வருமான மூலத்தின் கீழ் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களால் சேகரிக்கப்படுகின்ற வருமானங்கள் வகைப்படுத்தப்பட்டு தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

30701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்வாறான இணக்ககூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்வாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகை ரூபா 3,529,055 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதி 01 ஆண்டிலிருந்து 28 ஆண்டுகள் வரையான கால வீச்சில் காணப்பட்டு வருகின்ற போதிலும் இந்த நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத மற்றும் கறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 03 மாடிகளைக் கொண்ட ஆவணக் காப்பகக் கட்டிடத்தின் ஒரு பக்கம் சாய்ந்ததன் காரணமாக பயன்படுத்தப்படாது ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தை மீளமைத்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கோ அல்லது உடைத்து அகற்றுவதற்கோ மீளாய்வாண்டின் இறுதிவரையும் நடவடிக்கை எடுக்கவில்லை இதன் காரணமாக சுற்றாடலில் அதிகளவான இடவசதி வீண் விரயமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார்கார், வேன், முச்சக்கரவண்டி என்பன தொழில்நுட்ப கோளாறு காரணமாக நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் இச்சொத்துக்களை விற்றுத்தீர்ப்பதற்கோ அல்லது மீளமைத்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பணத்தை கணிப்பீடு செய்யும் 03 இயந்திரங்கள் பழுதடைந்ததன் காரணமாக கொள்வனவு செய்த திகதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை<br>XII ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | ஒரு உத்தியோகத்தர் விடுமுறையைப் பெற்றுக் கொள்கையில் குறித்த வேலையை மேற்கொள்வதற்காக பொருத்தமான வேலைத்திட்டம் ஈடுபடுத்த வேண்டிய போதிலும் வேரஹெர அலுவலகத்தில் 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை 85 உத்தியோகத்தர்கள் விடுமுறை பெற்றுக்கொண்ட போது அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>நிதிப் பிரமாணம் 1646 | திணைக்களத்திற்குச் சொந்தமான 17 குழாம் வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் 2012 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொது நிருவாகச் சுற்றறிக்கை | |
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் பாவனை 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | வருகைகளையும் வெளிச்செல்லலையும் உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் பதிவு செய்தல் அனைத்து உத்தியோகத்தர்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மோட்டார் வாகனப் பரிசோதகரால் வருகையின் போதும் வெளிச்செல்லலின் போதும் விரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கலில்லை. |
| (ஈ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை<br>2001 யூலை 02 ஆந் திகதிய MF/GA2/சுற்றறிக்கை/2001/03 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயிற்சி பூர்த்தியடைந்து 2 வாரங்களுக்குள் அது தொடர்பான ஒரு அறிக்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு பயிற்சிக்காகப் |

| | | |
|---|---|---|
| | | பங்குபற்றிய 12 உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை அந்த 12 உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயிற்சிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,597,180 செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | அரசாங்க நிதி சுற்றறிக்கை | |
| | 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 (1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 மற்றும் 4 ஆம் பந்திகள் | 2004 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் கொள்வனவு செய்த சொத்துக்கள் சம்பந்தமான விபரங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கை அரையாண்டு ரீதியாக அரசாங்க நிதித் திணைக்களத்திற்கான ஒரு பிரதியுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை | |
| | 2013 யூலை 12 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ இலக்க சுற்றறிக்கை | நிறுவனத்திற்கு சொந்தமான காணிகள் கட்டிடங்கள், ஏனைய சொத்துக்கள் என்பவற்றை மதிப்பீடு செய்யும் செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. |
| (எ) | ஏனைய சுற்றறிக்கை மற்றும் வர்த்தமானி அறிவித்தல் | |
| | (i) 2015 நவம்பர் 02 ஆந் திகதிய 1939/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்ட 2015 இன் 01 ஆம் இலக்க மோட்டார் வாகன கட்டளை இலக்கம் 01 | அனைத்து சாரதிப் பாடசாலைகளும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 21 சாரதிப் பாடசாலைகளில் 06 சாரதிப் பாடசாலைகளான 28 சதவீதம் அளவானவை அவ்வாறு பதிவு செய்து கொண்டிருக்கவில்லை. |
| | (ii) 1991 யூன் 05 ஆந் திகதிய 665/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள மோட்டார் வாகன கட்டளை இல.13 | செல்லுபடியாகும் வாகனத்தை ஓட்டுகின்ற உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத ஒரு நபர் வாகனத்தை ஓட்டும் ஆலோசகராக சேவையில் ஈடுபடுத்தக் கூடாது என்றபோதிலும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் வாகனத்தை ஓட்டும் ஆலோசகர் உத்தரவுப்பத்திரத்தை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்காததன் காரணமாக சாதாரண சாரதிகள் வாகனங்களை ஓட்டுவதற்கு பயிற்சியளிக்கும் நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| | (iii) 2016 மார்ச் 21 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | (i) உரிய ஒழுங்கு விதிகளுக்கு முரணாக 2014 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட 12 மோட்டார் சைக்கிள்கள் 2016 மார்ச் 24 ஆம் திகதிக்குப் பின்னர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.<br>(ii) திணைக்களத்தின் கணனி முறைமையிலுள்ள சுங்கத்தகவல்களையும் விண்ணப்ப படிவத்திலுள்ள தகவல்களையும் ஒப்பீடு |

செய்யாது மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iii) சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்துள்ள மோட்டார் சைக்கிள்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் பிராந்திய அலுவலகங்களில் பதிவுசெய்து கொள்ள முடியாது என்ற போதிலும் அந்த அறிவுறுத்தல்களை கருத்தில் கொள்ளாது குருநாகல் பிராந்திய அலுவலகத்தால் 08 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(எ) பொதுச் சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகள்
------------------------------------------------

(ix) ஆம் அத்தியாயம் — இரண்டு ஆணையாளர்களால் இரண்டு உதவி ஆணையாளர்களின் கடமைகளை பதிற் கடமை அடிப்படையில் மேற்கொள்ளல்.

**3.8 உள்நாட்டு நிதிகளின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் நடவடிக்கைகளை செயற்திறனுடையதாக்குவதற்காக 2009 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட ஈ மோடரிங் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 740 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அதனை அமுல்படுத்தலில் தாமதத்தன்மை காணப்பட்டது. உரிய செயற்திட்டத்தை BOT அடிப்படையின் கீழ் அமுல்படுத்துவதற்கு 2016 யூலை 13 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அதனை நடைமுறைப்படுத்தல் மேலும் தாமதமடைந்து காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப் பட்ட கிரயம் | ஆரம்பிக் கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்த திகதி | 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவுகள் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | | ரூபா மில்லியன் | |
| ஆவணக் காப்பகத்தை நிர்மாணித்தல் | 87 | 2016.03.26 | 2016.11.30 | பூர்த்தி செய்யப்பட வில்லை | 98 | மின்சாரம் வழங்கப் படாமை. |
| ஆவணக் காப்பகத்தில் இறாக்கைகள் | 127 | 2017.01.12 | 2017.04.12 | பூர்த்தி செய்யப்பட வில்லை | 85 | மின்சாரம் வழங்கப் படாமை. |

பொருத்துதல்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சாரதி பரிசோதனை, ஓட்ட அட்டவணை மற்றும் மோட்டார் வாகன தரிப்பிடம் நிர்மாணித்தல் | 93 | 2015.07.15 | 2016.07.15 | பூர்த்தி செய்யப்பட வில்லை | வழங்கப்பட வில்லை. | முறைப் படியாக நடவடிக்கை எடுக்காமை |

**3.9 செயலாற்றல்**

--------------------

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) வாகனங்களைப் பதிவு செய்தல், உரிமைகளை ஒப்படைத்தல், சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

---

திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகிய மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல், வாகன உரிமைகளை ஒப்படைத்தல், சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் என்பவற்றின் செயல் முன்னேற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| செயற்பாடு | அளவு | | அதிகரித்தல் / குறைவடைதல் | அதிகரித்தல் / குறைவடைதல் சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | | |
| | | | | % |
| மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல் | 493,328 | 668,907 | (175,579) | (26) |
| வாகன உரிமைகளை ஒப்படைத்தல் | 491,788 | 417,343 | 74,445 | 18 |
| புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். | 358,560 | 279,220 | 79,340 | 28 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வாகனங்களைப் பதிவு செய்தல் 175,579 ஆல் அல்லது 26 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அரசாங்கத்தால் வாகனங்களின் இறக்குமதி மீது உயர்ந்த சுங்கத் தீர்வையை விதித்தல் அதற்கான பிரதான காரணமாக இருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வாகன உரிமை மற்றும் 18 சதவீதத்தால் அல்லது 74,445 வாகனங்களால் முன்னேற்றமடைந்திருந்ததுடன் நிவாரணத் தண்டப்பணத்துடன் உரிமை

மாற்றம் செய்வதற்கு வாகன உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கியிருத்தல் இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(iii) புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 28 சதவீதத்தால் அல்லது 79,340 ஆல் அதிகரித்திருந்தது. அரசாங்கத்தால் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் முச்சக்கர வண்டி சாரதிகளுக்காக வழங்கப்பட்டிருக்கின்ற புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வயதெல்லையை அதிகரித்தல் சம்பந்தமாக செய்யப்பட்ட பகிரங்கப்படுத்தலின் காரணமாக இந்த அதிகரிப்பு இடம்பெற்றிருந்தது. தற்பொழுது பயன்பாட்டிலுள்ள இலத்திரனியல் எழுத்துக்களுடன் சாரதி உத்தரவுப் பத்திரத்திற்குப் பதிலாக புதிய சாரதி உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்குப் பொருத்தமான வேலைத் திட்டம் திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்

---

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக எழுத்து மூலப் பரீட்சையும் செயன்முறைப் பரீட்சையும் நடாத்துதல், வாகன இலக்கத் தகடுகளை வழங்குதல், சாரதிப் பாடசாலைகளை கண்காணித்தல் முதலிய 20 தொகுதிகளின் கீழ் தொழில் நுட்ப சேவைகள் நடாத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் சாரதி அனுமதிப் பத்திரங்களுக்காக எழுத்து மூலப் பரீட்சைகளை கணனிகளைப் பயன்படுத்தி நடாத்துவதற்கு பொருத்தமான வேலைத் திட்டம் ஈடுபடுத்தப்படாமையின் காரணமாக தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்ற பரீட்சை முறைமையின் வெளிப்படைத் தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறே சாரதிப் பாடசாலைகளைக் கண்காணித்தலும் திருப்தியான மட்டத்தில் இருக்கவில்லை.

(இ) வீதிப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை வகுத்தல்

---

வீதிப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை வகுத்தல் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்தும் அது தொடர்பான பொருத்தமான வேலைத் திட்டம் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) வாயு வெளியாகுதல் நிலைமையைக் கண்காணித்தல்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாயு மாசடைதல் இடம்பெற்றுள்ள துறைகளையும் பிரதேசங்களையும் இனங்காண்பதற்கு சில நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தும் சுகாதார ஆபத்துக்களைக் குறைத்து பொது மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் வாயு நிலைமையினை மேம்படுத்துவதற்காக போதிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வாயு வெளியாகுதல் பரிசோதனை நம்பிக்கை நிதியத்தால் இது வரை அமுல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு செயற்திட்ட நடவடிக்கைகள் முறையான மதிப்பீட்டிற்கு, மீளாய்விற்கு அல்லது பகுப்பாய்விற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அச்செயற்திட்டங்களில் உருவாகியுள்ள வழமைக்கு மாறான தாமதங்களைத்

தவிர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) வாகன முகாமைத்துவத்திற்காக வசதிகளை வழங்குதல் மற்றும் மேம்படுத்தல் முதலியவற்றிற்காகவும் மீளாய்வாண்டின் போது வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) வருமானங்களைச் சேகரித்தல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுங்கத் தீர்வை சலுகை உத்தரவுப் பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களை ஏனைய தரப்பினர்களுக்கு உரிமை மாற்றுவதன் அடிப்படையில் அறவிடப்படுகின்ற தீர்வை வருமானம் அதன் ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 1,000 மில்லியனாக இருந்தும் உள்ளபடியாக உழைக்கப்பட்ட தீர்வை வருமானம் ரூபா 692.5 மில்லியனாகும். அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு மிகையான உள்ளபடியான தீர்வை வருமானம் 31 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே உள்ளபடியான தீர்வை வருமானத்தை திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது 23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இந்நிலைமைக்கான அடிப்படைக் காரணம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை தீர்வை வரி சலுகை உத்தரவுப்பத்திரத்தின் அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த சலுகை மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக சுங்கத் தீர்வை சலுகை உத்தரவுப் பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களை உரிமை மாற்றுதல் குறைவடைந்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ii) சுங்கத் தீர்வை சலுகை உத்தரவுப் பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்கின்ற வாகனங்களை வேறு தரப்பினர்களுக்கு ஒப்படைப்பதன் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் போது ஒப்படைத்தல் கட்டணமாக ரூபா 1,219 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தும் 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 692.5 மில்லியன் வரை அதாவது 43 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அரசாங்க ஊழியர்களுக்காக சுங்கத்தீர்வை சலுகை உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுத்தல் இவ்வருமானக் குறியீட்டின் கீழ் சேகரித்த வருமானம் குறைவடைந்தமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. மேலும் சுங்கத் தீர்வை சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் 05 ஆண்டுகளுக்கு முன்னர் உரிமை மாற்றம் செய்யலாகாது என ஆலோசனை தெரிவித்து வழங்கப்பட்டிருந்த 2016 யூலை 14 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் இவ் வருமானக் குறியீட்டின் கீழ் வருமானத்தைச் சேகரித்தல் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக இடம் பெறுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) அதிசொகுசு மோட்டார் வாகன தீர்வை வருமானமானது ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 1,750 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியாக உழைக்கப்பட்டுள்ள தீர்வை வருமானம் ரூபா 1,400 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு மிகையாக உள்ளபடியான தீர்வை வருமானம் 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எனினும் உள்ளபடியான தீர்வை வருமானத்தை பின்னர் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டு வருமானத்துடன் ஒப்பிடும் போது 5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(iv) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிசொகுசு மோட்டார் வாகனங்களையும் அரை சொகுசு மோட்டார் வாகனங்களையும் பதிவு செய்தல் முறையே 60 சதவீதத்தாலும், 14 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன. வாகனங்களைப் பதிவு செய்தல் குறைவடைந்திருந்தமைக்கு மோட்டார் வாகனங்களின் மீது அதிக சதவீதமான தீர்வைகள் விதிக்கப்பட்டமை அடிப்படைக் காரணமாக அமைந்தது.

(v) மோட்டார் வாகனங்களை பதிவு செய்தலில் குறிப்பிடத்தக்க அளவு குறைவு அவதானிக்கப்பட்டிருந்தும் திருத்திய மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது உள்ளபடியான தீர்வை வருமானம் உயர்ந்த செயலாற்றலை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவையான தீர்வை வருமானம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானத்தில் முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட சரியான நிலுவையாகவுள்ள தீர்வை வருமானம் தொடர்பாக போதியளவு தரவுகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) மோட்டார் வாகனங்களை விற்பனை செய்தல் மீதான வரி வருமானம் அதன் ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 70 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியாக உழைக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 64.5 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட உள்ளபடியான வரி வருமானம் 8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே உள்ளபடியான வரி வருமானத்தை திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது 0.77 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

வாகன இறக்குமதியின் போது உயர்ந்த சுங்கத் தீர்வை விகித்தை நிர்ணயிப்பதன் காரணமாக வாகன இறக்குமதி மட்டுப்படுத்தப்படுவதும் அதன் காரணமாக உரிமையாளர்கள் வைத்திருக்கும் வாகனங்களை விற்பனை செய்வதில் நாட்டமின்றி இருப்பதுவும் அவ்வாறான வாகன விற்பனை வரி வருமானம் குறைவடைவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது.

(vii) மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவு வருமானம் அதன் ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 9,500 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியாக ஒழைக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 8,847.5 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட உள்ளபடியான வருமானம் 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எனினும் உள்ளபடியான வரி வருமானமானது திருத்திய மதிப்பீட்டு வருமானத்துடன் ஒப்பிடும் போது 4 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(viii) மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்களும் ஏனைய பெறுவனவுகளும் வருமான குறியீட்டின் கீழ் சேகரிக்கப்படுகின்ற வருமானம் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 498 மில்லியனால் அல்லது 5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. வாகனங்களுக்கான அரசாங்கத்தின் உயர்ந்த இறக்குமதி வரிக் கொள்கை மற்றும் அனைத்து வாகனங்களுக்குமாக குத்தகை எல்லையை விதித்தல் முதலிய விடயங்களின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பதிவு செய்த வாகனங்களின் எண்ணிக்கை 26 சதவீதம் அளவில் குறைவடைந்தமை இவ்வருமானம் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

உதாரணம் :- முன்னைய ஆண்டின் போது பதிவு செய்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 105,628, ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது 45,172 ஆகியதன் காரணமாக 57 சதவீதத்தால் குறைவடைந்தது.

(ix) 2016 ஆம் ஆண்டின் போது வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்காக ரூபா 1,477 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் சாரதி உத்தரவுப் பத்திரங்களை அச்சிடுவதற்காக ரூபா 968 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த 02 வருமான மூலங்களுக்காக மாத்திரம் 2016 ஆம் ஆண்டின் போது செலவு செய்த பணம் ரூபா 2,451 மில்லியனாக இருந்ததுடன் அது இந்த வருமானக் குறியீட்டின் கீழ் சேகரித்த ரூபா 8,847 மில்லியன் வருமானத்தில் 28 சதவீதத்திற்கு அண்மித்த அளவில் இருந்தது. மேலும் வருமானத்தை உழைப்பதற்காக மேற்கொண்ட கிரயத்தை இனங்காண்பதற்கும் ஒப்பிடுவதற்குமான முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(x) சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக திணைக்களத்தினால் ரூபா 1,700 தொகை அனுமதிப் பத்திரதாரர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன் அதில் ரூபா 1,540 உரிய அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் கம்பனிக்குச் செலுத்துவது வழமையான நடைமுறையாகும். அவ்வாறே சாரதி அனுமதிப் பத்திரப் பிரிவை பராமரிப்பதற்காக சம்பளம், மேலதிக நேர வேலைப் படி, ஊக்குவிப்பு படி மற்றும் ஏனைய பொதுச் செயற்பாட்டுச் செலவுகளுக்காக அதிக கிரயம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறு இடம்பெற்ற செலவை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை நிர்ணயிக்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தற்பொழுது அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்படும் கட்டணம் இவ்வருமானக் குறியீட்டின் வருமானமாகவும் அதற்காகச் செலுத்தப்படும் அனைத்து செலவுகளும் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்தல் வழமையான நடைமுறையாக இருந்தது. இவ்வாறே சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக அறவிடப்படுகின்ற பணத்திலிருந்து திணைக்களத்தின் பொதுச் செயற்பாட்டுக் கிரயத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திட்டமிடல்

----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வேரஹெர உத்தேச ஆவணக்காப்பக கட்டிடத்திற்காக ரூபா 20 மில்லியன் செலவு செய்வதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தும் இது தொடர்பாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நிகழ்கால விலை உயர்வடைதல், திணைக்கள தேவைப்பாடு விரிவடைதல் என்பவற்றின் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்காக ரூபா 98 மில்லியன் அளவில் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க நடைமுறை நிலைமையைக் கவனத்தில் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் Surge Protection of District Office என்பதற்காக ரூபா 2.92 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் மாவட்ட அலுவலகத்தினால் இணையதளத்தினூடாக சேவையை நிறைவேற்றுவதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தோற்றுவிக்காமையின் காரணமாக உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.10 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2016 மே 12 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் வாகன குற்றச்செயல்களை ஆவணப்படுத்தலும் எதிர்ப்புக்களை கணனிமயப்படுத்தலும் திணைக்களத்தின் உள்ளகக்கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2016 மே 12 ஆந் திகதியின் பின்னர் மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது அதற்கு முரணாகச் செயற்பட்டிருந்த 17 சந்தர்ப்பங்கள் வெளிபடுத்தப்பட்டன.

### 3.11 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக திணைக்களத்தினால் சரி செய்தல் இடம்பெற்றிருக்காத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2014 | 5.9(அ) (vii) (viii) | செயலாற்றல் |
| 2014 | 5.10 (இ), (உ), (எ), (ஏ), (ஐ) | சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் |
| 2014 | 5.11 (iv) | நிதி ஒழுங்கீனத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் |
| 2014 | 5.13 (அ) | முகாமைத்துவ பலவீனங்கள் |
| 2015 | 3.2 (ஆ) | கணக்காய்விற்கான சான்றுகளின்மை |
| 2015 | 3.7 (அ) | அரசாங்க உத்தியோக்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணக்ககூற்று |
| 2015 | 3.12 (ஆ), (இ) | சச்சரவுத் தன்மையான விடயம் |
| 2015 | 3.13 (அ), (இ) | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் |
| 2015 | 3.17 | மனிதவள முகாமைத்துவம் |

### 3.12 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடுவதற்கான ஒப்பந்தம் 2009 மார்ச் 27 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் BOT அடிப்படையின் கீழ் 07 ஆண்டுகள் காலத்திற்கு தனியார் ஒப்பந்தகாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம்

அச்செயற்பாடு 2016 மார்ச் 26 ஆந் திகதியிலிருந்து மீண்டும் திணைக்களத்திடம் ஒப்படைக்கவேண்டியிருந்தது எனினும் அவ்வாறு ஒப்படைக்காது உரிய ஒப்பந்தகாலம் 2018 மார்ச்26 ஆந் திகதி வரை 02 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நவீன தொழிநுட்பவியலாளர்களின் முன்னேற்றத்தின் மூலம் உருவாக்கிய கிரய நலன்கள் பாவனையாளர்களுக்கும் அதேபோல திணைக்களத்திற்கும் இழக்கப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின் கீழ் 2016 ஆம் ஆண்டில் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்காக மாத்திரம் உரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 968 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வரும் புதிய சீமாட் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குப் பதிலாக Single Digital Transaction Card உடன் ஒன்றிணைத்து சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அமைச்சினால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் அத்தீர்மானம் கிடைக்கும் வரை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதுள்ளது என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) திணைக்களத்தில் பதிவு செய்து கொண்ட வாகனங்களின் இலக்கதகடுகளை அச்சிடுவதற்கான ஒப்பந்தம் 2010 மே 01 ஆம் திகதியிலிருந்து 2015 ஏப்ரல் 30 திகதி வரை தனியார் ஒப்பந்த கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2015 ஏப்ரல் 30 ஆந் திகதிக்குப் பின்னர் மீண்டும் விலை மனுக்கள் கோரப்பட்டு அதற்காக புதிய ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யாது பழைய ஒப்பந்தகாரரின் சேவைக்காலம் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை 03 சந்தர்ப்பங்களில் பழைய விலைக்கே நீடிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக புதிய தொழில்நுட்பவியலாளர்களின் முன்னேற்றத்தினால் குறைந்த விலைக்கு இலக்கத் தகடுகளை அச்சிட்டுக் கொள்வதன் மூலம் உருவாகும் கிரய நலன்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் பாவனையாளர்களாலும் அதேபேல திணைக்களத்தினாலும் இழக்கப்பட்டிருந்தது. தற்பொழுது ஒப்பந்தகாரர் அறவிடுகின்ற விலையை விட குறைவாக ரூபா 300 குறைத்து இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்கு தற்பொழுது விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) வாகனங்களை புதிதாகப் பதிவு செய்யும் போது வாகனங்களின் சிலிண்டர் இயலளவு மற்றும் எரிபொருள் வகையின் பிரகாரம் அதிசொகுசு வரி அறவிடப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் அதற்குரிய தகவல்கள் விளக்கமளிக்கப்படாத சந்தர்ப்பங்களிலும் அவை தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ள கொடுப்பனவாக கணனி முறைமைக்கு உள்ளடக்கப்படுகின்றன. 07 சந்தர்ப்பங்களின் போது இவ்வாறு தீர்த்து வைக்கப்படவேண்டியுள்ள கொடுப்பனவுகளாக கணனி முறைமைக்கு தரவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணனி முறைமை மற்றும் தொடர்புபட்ட சுங்கத் திணைக்களத்தின் தகவல் தொடர்பின் மூலம் மோட்டார் வாகனங்களைப் புதிதாகப் பதிவு செய்வதற்குரிய தரவுகளை நேரடியாகப் பரீட்சிக்கக் கூடிய வகையில் மேம்படுத்திய தகவல் தொடர்பை பேண வேண்டு மென்று பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள Chip இல் அனுமதிப்பத்திரதாரியின் தனிப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றன. அனுமதிப்பத்திரத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அத்தகவல்களை வாசிப்பதற்கு அதே போல் புதிய தகவல்களை இந்த Chip இல் உள்ளடக்குவதற்கு முடியுமான வகையில் இந்த வசதிகளை பெற்றுக் கொள்வதன் காரணமாக புதிய சாரதி

அனுமதிப்பத்திரத்தை அச்சிடுவதற்காக ரூபா 1,340 கிரயத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது எனினும் அந்த சாரதி அனுமதிபத்திரத்திலுள்ள தரவுகளை வாசிப்பதற்காக விசேடத்துவமான உபகரணம் வழங்கப்படவேண்டிய போதிலும் இச்செயற்திட்டம் ஆரம்பித்து 07 ஆண்டுகள் கடந்திருந்தும் அதற்காக உரிய இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சாரதி அனுமதிப்பத்திரங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள Chip இற்காக மேற்கொண்ட செலவு விளைவற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பதாரர்கள் செயன் முறைப் பரீட்சைக்கு தோற்றியததன் பின்னர் அவர்/அவரின் பெறுபேறுகளை கணனி முறைமைக்கு உள்ளடக்கும் வசதி குருநாகல் மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் பரீட்சையில் சித்தியடைந்த திகதியிலிருந்து 02 மாதங்களை அண்மித்து அல்லது அதற்கு மேற்பட்ட காலம் எடுக்கும் வரை உரிய பெறுபேறு கணனி முறைமைக்குள் உள்ளடக்கப்படாத 18 சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிதேசாதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க பரீட்சை பெறுபேறு சம்பந்தமாக ஏதாவது ஒழுங்கீனம் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளது என்ற சந்தேகத்தை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

(எ) சாரதி அனுமதி பத்திரத்தை வழங்கும் போது உரிய எழுத்துமூல பரீட்சைக்காக பரீட்சை வினாத்தாள்களைத் தயாரித்தல், பரீட்சைகளை நடாத்துதல், விடைத்தாள்களைப் பரீட்சித்தல், விடைகளை கணனிமயப்படுத்துதல், விடைத்தாள்களை வைத்திருத்தல், பரீட்சைகளைத் தடைசெய்தல், ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் மோட்டார் வாகன பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது உரிய விடைத்தாள்களின் தொடர் இலக்க முறைமை திணைக்களத்தால் பயன்படுத்தப்படாமையின் காரணமாக போலியான விடைத்தாள்களை உள்ளடக்கக் கூடிய வாய்ப்புக்கள் காணப்பட்டன. அதற்கிணங்க அதன் உள்ளகக் கட்டுபாட்டு பலவீனத்தின் காரணமாக தவறுகளும் முறைகேடுகளும் இடம்பெறக்கூடிய சுற்றாடல் உருவாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2015 மார்ச் 05 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கையின் பிரகாரம் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது தேவைப்படுகின்ற வாய்மொழிமூல பரீட்சைக்காக 03 உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் ஒரு மோட்டார் வாகன பரிசோதகரினால் மாத்திரம் வாய்மொழிமூல பரீட்சை நடாத்தப்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2015 மார்ச் 05 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 4.6 ஆம் பந்தியின் பிரகாரம் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது எழுத்துமூல பரீட்சையை நடாத்துவது சம்பந்தமான பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் விண்ணணப்பதாரரின் அடையாளம் தொர்பாக எதுவித குறிப்பும் இல்லாதிருக்க வேண்டிய போதிலும் அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் பெயர், புகைப்படம், என்பன உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அச்சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் பரீட்சாத்தி பரீட்சை மண்டபத்திற்குச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் பரீட்சாத்தியினால் விடைத்தாள்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது இச்சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சைகளை நடாத்தும் போதும் விடத்தாள்களைப் பரீட்சிக்கும் போதும் பரீட்சாத்தியின் அடையாளத்தை உரிய பரீட்சகர் அடையானம் கண்டுகொள்வதனால் பரீட்சைகளை நடாத்தும் நடைமுறையின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

(ஒ) அரைச் சொகுசு வரி அறவிட வேண்டிய ஒரு வாகனத்திற்கு உரிய வரிப்பணத்தை ஆரம்பத்தில் பதிவு செய்த சந்தர்ப்பத்தின் போது அறவிட்டுக் கொள்ள முடியாமையின் காரணமாக அடுத்து வரும் ஏழு ஆண்டுகளின் போது கிடைக்க வேண்டிய ரூபா 240,000 வரி வருமானத்தை இழப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**3.13 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 28 | 29 | - | 01 |
| மூன்றாம் மட்டம் | 23 | 06 | 17 | - |
| இரண்டாம் மட்டம் | 796 | 730 | 66 | - |
| ஆரம்ப மட்டம் | 128 | 120 | 08 | - |
| மொத்தம் | 975 | 885 | 91 | 01 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 திசெம்பர் 30 ஆந் திகதிய 05/2012 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஒரு சேவை நிலையத்தில் 05 ஆண்டுகள் சேவையாற்றியதன் பின்னர் கட்டாயமாக மற்றுமொரு சேவைநிலையத்திற்கு மற்றம் செய்யப்படுதல் வேண்டும். எனினும், திணைக்களத்தின் 63 உத்தியோகத்தர்கள் ஒரு சேவை நிலையத்தில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றி வருகின்றமை அவதானிக்கப்பட்டது.